## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!

13 ஆம் பக்கத் தொடர்ச்சி

### சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.

| வ. எ ண் | பகுதி செயலாளர் | பொறுப்பாளர் | கோட்டம் | போட்டிகள் | தேதி |
|---|---|---|---|---|---|
| 1 | ஏ.தமிழரசன் சூரமங்கலம் பகுதி 9443234061 | ரா.ராஜேஷ் மாவட்ட துணை அமைப்பாளர் விளையாட்டு மேம்பாட்டு அணி 9791555543 | 20வது | கபாடி | 21,22-12-2024 |
| | | | 21வது | கிரிக்கெட், | 05.01.2025 |
| | | | 21வது | கோலப்போட்டி | 05.01.2025 |
| | | | 22வது | கோலப்போட்டி, | 28-12-2024 |
| | | | 22வது | மியூசிக் சேர் | 28-12-2024 |
| | | | 01வது | கால்பந்து | 28,29-12-2024 |
| 2 | சி.பன்னீர்செல்வம் மெய்யனூர் பகுதி 9443472461 | த.ஆனந்தகண்ணன் மாநகர அமைப்பாளர் விளையாட்டு மேம்பாட்டு அணி 9677777623 | 19வது | கபாடி | 15-12-2024 |
| | | | 2வது | கிரிக்கெட் | 20-12-2024 |
| | | | 18வது | இறகுபந்து | 22-12-2024 |
| | | | 23வது | கிரிக்கெட் | 25-12-2024 |
| | | | 24வது | கிரிக்கெட் | 25-12-2024 |
| 3 | ஜி.ஜெயக்குமார் அழகாபுரம் பகுதி 9994771730 | Dr.வெ.செங்கமலை மாநகர துணை அமைப்பாளர் விளையாட்டு மேம்பாட்டு அணி 9443791962 | 3வது | கிரிக்கெட் | 22,25-12-2024 |
| | | | 4வது | கபாடி | 22,25-12-2024 |
| | | | 5வது | கிரிக்கெட் | 22,25-12-2024 |
| | | | 17வது | கிரிக்கெட் | 22,25-12-2024 |
| | | | 25வது | கிரிக்கெட் | 22,25-12-2024 |
| 4 | ஆ.இராமச்சந்திரன் அஸ்தம்பட்டி பகுதி 9443380307 | S.மோகன்குமார் மாநகர துணை அமைப்பாளர் விளையாட்டு மேம்பாட்டு அணி 9443471828 | 6வது | தற்காப்பு கலைகள் | 25.12.2024 |
| | | | 6வது | சிலம்பம் | 25.12.2024 |
| | | | 7வது | இறகுபந்து | 22.12.2024 |
| | | | 8வது | கிரிக்கெட் | 28,29-12-2024 |
| | | | 12வது | கால்பந்து | 4,5-01-2025 |
| | | | 13வது | குழந்தைகள் மற்றும் மகளிர்க்கான பானை உடைத்தல் | 22-12-2024 |
| | | | 13வது | கோலப்போட்டி | 22-12-2024 |
| | | | IT wing | கபாடி | 29-12-2024 |
| 5 | எம்.ஆர்.சாந்தமூர்த்தி குமாரசாமிபட்டி பகுதி 9629794444 | த.ஆனந்தகண்ணன் மாநகர அமைப்பாளர் விளையாட்டு மேம்பாட்டு அணி 9677777623 | 14வது | கோலப்போட்டி | 7,8-01-2025 |
| | | | 14வது | உரி அடித்தல் | 7,8-01-2025 |
| | | | 14வது | சைக்கிளிங் | 7,8-01-2025 |
| | | | 14வது | (ஆண்,பெண்) ஓட்டப்பந்தியம் | 7,8-01-2025 |
| | | | 14வது | லெமன் ஸ்பூன் | 7,8-01-2025 |
| | | | 14வது | (ஆண்,பெண்) சாக்கு போட்டி | 7,8-01-2025 |
| | | | 14வது | (ஆண்,பெண்) பாட்டில் நீர் நிரப்புதல் | 7,8-01-2025 |
| | | | 14வது | முறுக்கு சாப்பிடுதல் (கயிறு கட்டி) | 7,8-01-2025 |
| | | | 14வது | மியூசிக் சேர் | 7,8-01-2025 |
| | | | 14வது | ஸ்கிப்பிங்க | 7,8-01-2025 |
| | | | 14வது | பெண் மாறுவேட போட்டி | 7,8-01-2025 |
| | | | 14வது | கயிறு இழுத்தல் | 7,8-01-2025 |
| | | | 15வது | கிரிக்கெட், | 07-01-2025 |
| | | | 15வது | வாலிபால் | 07-01-2025 |
| | | | 16வது | வாலிபால் | 21,22-12-2024 |
| | | | 32வது | மியூசிக் சேர், | 24.12.2024 |
| | | | 32வது | சாக்குப்பை குதித்தல், | 24.12.2024 |
| | | | 32வது | லெமன் ஸ்பூன், | 24.12.2024 |
| | | | 32வது | ஓட்டப்பந்தையம் | 24.12.2024 |
| | | | 32வது | பிராக் ஜம்ப் | 24.12.2024 |
| | | | 32வது | ராபிட் ஜம்ப் | 24.12.2024 |
| | | | 32வது | பாட்டிலில் நீர் நிரப்பும் போட்டி | 24.12.2024 |
| 6 | சி.பிரகாஷ் செவ்வாய்பேட்டை பகுதி 8248492173 | அன்புக்கரசு மாவட்ட அமைப்பாளர் விளையாட்டு மேம்பாட்டு அணி 9842705657 | 27வது | கிரிக்கெட் | 21,22.12.2024 |
| | | | 27வது | கோலப்போட்டி | 21,22.12.2024 |
| | | | 27வது | கேரம்போர்டு | 21,22.12.2024 |
| | | | 28வது | கோலப்போட்டி | 22.12.2024 |
| | | | 28வது | இறகுபந்து | 22.12.2024 |
| | | | 28வது | கேரம்போர்டு | 22.12.2024 |
| | | | 30வது | சதுரங்கம் | 22.12.2024 |
| | | | 30வது | கோலப்போட்டி | 22.12.2024 |
| | | | 31வது | மியூசிக் சேர், | 22.12.2024 |
| | | | 31வது | பானை உடைத்தல் | 22.12.2024 |
| | | | 31வது | கோலப்போட்டி | 22.12.2024 |
| | | | 31வது | கபாடி | 22.12.2024 |
| | | | | சேர்மன் மதுரை தெரு கோலப்போட்டி | 22.12.2024 |
| | | | | செவ்வாய்பேட்டை பகுதிக்குட்பட்ட கோட்டங்களுக்கு – நரசிம்ம செட்டி சாலை உள் விளையாட்டு அரங்கம் கிரிக்கெட் போட்டி | 22.12.2024 |
| 7 | மணமேடு டி.மோகன் அரிசிபாளையம் பகுதி 9500672060 | M.ஞானசுந்தர் 9677728839 | 34வது | கிரிக்கெட் | 15-12-2024 |
| | | | 34வது | கபாடி | 15-12-2024 |
| | | | 34வது | கேரம் | 15-12-2024 |
| | | | 11வது | கோலப்போட்டி | 22-12-2024 |
| | | | 11வது | மியுசிக் சேர் | 22-12-2024 |
| | | | 11வது | கயிறு இழுத்துல் | 22-12-2024 |
| | | | 26வது | இறகு பந்து | 29.12.2024 |
| | | | 26வது | கிரிக்கெட் | 29.12.2024 |
| | | | 26வது | கோலப்போட்டி | 29.12.2024 |
| | | | 29வது | கிரிக்கெட் | 29.12.2024 |
| | | | 29வது | கோலப்போட்டி | 29.12.2024 |
| | | | 38வது | கராத்தே | 05-01-2025 |
| | | | 39வது | கிரிக்கெட் | 29-12-2024 |
| | | | 40வது | மகளிர் கோலப்போட்டி | 29-12-2024 |
| | | | 40வது | மகளிர் மியூசிக் சேர் | 29-12-2024 |
| | | | 40வது | கயிறு இழுத்தல் | 29-12-2024 |
| 8 | கே.ஜெய் கிச்சிப்பாளை யம் பகுதி 9789233337 | ரா.சுந்தரமூர்த்தி மாநகர துணை அமைப்பாளர் விளையாட்டு மேம்பாட்டு அணி 9865097872 | 41வது | இறகுபந்து, | 14.12.2024 |
| | | | 41வது | கோலப்போட்டி | 14.12.2024 |
| | | | 42வது | கபாடி | 22-12-2024 |
| | | | 42வது | கோலப்போட்டி | 22-12-2024 |
| | | | 42வது | உறியடி போட்டி | 22-12-2024 |
| | | | 43வது | கிரிக்கெட் போட்டி | 27.12.2024 |
| | | | 44வது | வாலிபால், | 23.12.2024 |
| | | | 44வது | கோலப்போட்டி | 23.12.2024 |
| | | | 44வது | சதுரங்கம் | 23.12.2024 |
| | | | 45வது | கேரம் | 15.12.2024 |
| | | | 45வது | கபாடி | 15.12.2024 |
| | | | 45வது | இறகுபந்து | 15.12.2024 |
| 9 | எஸ்.ஜெகதீஸ் குகை பகுதி 9843388199 | க.சத்தியன் மாவட்ட துணை அமைப்பாளர் விளையாட்டு மேம்பாட்டு அணி 9600682531 | 46வது | சதுரங்கம் | 03-01-2025 |
| | | | 46வது | குத்துசண்டை | 03-01-2025 |
| | | | 47வது | கேரம் | 01-01-2025 |
| | | | 48வது | கிரிக்கெட் | 22-12-2024 |
| | | | 53வது | சிலம்பம் | 29-12-2024 |
| 10 | ஏ.எஸ்.சரவண ன் தாதகாபட்டி பகுதி 9443470715 | கௌரி சங்கர் தெற்கு தொகுதி ஒருங்கிணைப்பாளர் 7010567941 | 54வது | கோலப்போட்டி | 15-12-2024 |
| | | | 55வது | கபாடி | 23-12-2024 |
| | | | 56வது | குழந்தைகள் மற்றும் மகளிர் விளையாட்டு போட்டி | 15-12-2024 |
| | | | 57வது | பேச்சுப்போட்டி | 15-12-2024 |
| | | | 58வது | குழந்தைகள் மற்றும் மகளிர் விளையாட்டு போட்டி | 15-12-2024 |
| 11 | கு.ராஜா பொன்னம்மாபே ட்டை பகுதி 9443516566 | J.அருள்பிரகாஷ் மாணவர் அணி அமைப்பாளர் 9944173762 | 35வது | கிரிக்கெட் | 22,29-12-2024 |
| | | | 36வது | சதுரங்கம் | 21,28-12-2024 |
| | | | 36வது | கேரம் | 21,28-12-2024 |
| | | | 9வது | மியூசிக் சேர் | 29-12-2024 |
| | | | 9வது | பாட்டு போட்டி | 29-12-2024 |
| | | | 9வது | கண்கட்டி பாணை உடைத்தல் | 29-12-2024 |
| | | | 9வது | பலூன் உடைத்தல் | 29-12-2024 |
| | | | 9வது | லெமன் ஸ்பூன் | 29-12-2024 |
| | | | 9வது | கயிறு இழுத்தல் | 29-12-2024 |
| | | | 9வது | கேரம் | 29-12-2024 |
| | | | 10வது | சதுரங்கம் | 29-12-2024 |
| | | | 10வது | இறகுபந்து | 29-12-2024 |
| | | | 10வது | மியூசிக் போட்டி | 29-12-2024 |
| | | | 10வது | உறியடி போட்டி | 29-12-2024 |
| | | | 10வது | கோலப்போட்டி | 29-12-2024 |
| | | | 33வது | மியூசிக் சேர் | 22-12-2024 |
| 12 | ஆர்.பி.முருகன் கொண்டலாம்ப ட்டி பகுதி 9366644459 | பெ.மு.நாகராஜன் மாநகர துணை அமைப்பாளர் விளையாட்டு மேம்பாட்டு அணி 9629999993 | 49வது | கிரிக்கெட் | 29-12-2024 |
| | | | 49வது | கோலப்போட்டி | 29-12-2024 |
| | | | 50வது | கிரிக்கெட் | 29-12-2024 |
| | | | 50வது | வாலிபால் | 29-12-2024 |
| | | | 50வது | இறகுபந்து | 29-12-2024 |
| | | | 50வது | சதுரங்கம் | 29-12-2024 |
| | | | 50வது | கேரம் | 29-12-2024 |
| | | | 50வது | கோலப்போட்டி | 29-12-2024 |
| | | | 50வது | மியூசிக் சேர் | 29-12-2024 |
| | | | 50வது | ஓவியம் | 29-12-2024 |
| | | | 51வது | கைப்பந்து | 29-12-2024 |
| | | | 51வது | கபாடி | 29-12-2024 |
| | | | 51வது | இறகுபந்து | 29-12-2024 |
| | | | 51வது | கோலப்போட்டி | 29-12-2024 |
| | | | 52வது | சிலம்பம் | 29-12-2024 |
| | | | 52வது | கோலப்போட்டி | 29-12-2024 |
| | | | 59வது | சிலம்பம் | 29-12-2024 |
| | | | 59வது | இறகுபந்து | 29-12-2024 |
| | | | 59வது | கோலப்போட்டி | 29-12-2024 |
| | | | 60வது | கிரிக்கெட் | 29-12-2024 |
| | | | 60வது | சிலம்பம் | 29-12-2024 |
| | | | 60வது | கோலப்போட்டி | 29-12-2024 |
| | | | 60வது | கயிறு இழுத்தல் | 29-12-2024 |
| 13 | டி.தனசேகரன் அம்மாப்பேட்டை ட பகுதி 9443082520 | ஜிம் பிரதீப் மாவட்ட துணை அமைப்பாளர் விளையாட்டு மேம்பாட்டு அணி 9443393259 | 37வது | சதுரங்கம் | 05-01-2025 |
| | | | 38வது | கராத்தே | 05-01-2025 |
| | | | 39வது | கிரிக்கெட் | 29-12-2024 |
| | | | 40வது | மகளிர் கோலப்போட்டி | 29-12-2024 |
| | | | 40வது | மகளிர் மியூசிக் சேர் | 29-12-2024 |

**அமைச்சர் இரா.ராஜேந்திரன்**
செயலாளர், சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.



விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் முன்னிலையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பொது விநியோக திட்ட செயல்பாடுகள் குறித்து நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தொடர்புடைய அரசு அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

### நிதித்துறையின் அனுமதி பெற்று

# மின் வாரியத்தில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தகவல்!

சென்னை, டிச.15-

நிதித் துறையின் அனுமதி பெற்று, மின் வாரியத்தில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று சட்டப்பேரவையில் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி தெரிவித்தார்.



இது குறித்து சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளும் அதற்கு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அளித்த பதில்களும் வருமாறு:-

**துரை. சந்திரசேகரன்:** மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா— (அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், மாதவரம் ஊராட்சியில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் வி. செந்தில்பாலாஜி:** (அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், மாதவரம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் 11 மின்மாற்றிகள்மூலம் சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**துரை. சந்திரசேகரன்:** அமைச்சர் அவர்களுடைய பதிலில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். அதேநேரத்தில் நாங்கள் குறிப்பிட்டு கேட்பது என்னவென்றால், சோழவரம் ஊராட்சியிலுள்ள மாதவரம் பஞ்சாயத்தில்...

*Muslim nagar* முதல் மாதவரம் காலனி இடையே மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. அங்கே ஒரு 100 KVA மின்மாற்றி ஏற்படுத்தினால், சோழவரம் முழுமைக்கும் மின்சார *supply* என்பது மிகச் சிறப்பாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**அமைச்சர் வி.செந்தில்பாலாஜி:** பொன்னேரி தொகுதியில் மட்டும், புதியதாக 5 மின்மாற்றிகள் அதிக மின் பளுவை குறைப்பதற்கும், 6 புதிய மின் மாற்றிகள் குறைந்த மின் அழுத்தத்தை சீர்செய்வதற்கும் என மொத்தம் 11 புதிய மின் மாற்றிகள் நிறுவ திட்டமிடப்பட்டு, இதுவரை 3 மின்மாற்றிகள் இயக்கத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. மீதமுள்ள 8 மின்மாற்றிகளை நிறுவக்கூடிய பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. *Muslim nagar* பகுதியில் ஏற்கெனவே 100 KVA மின்மாற்றி ஒன்று அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. தேவையேற்படின் அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து இந்த ஆண்டில் முன்னுரிமை கொடுக்கப்படும் என்று உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**துரை. சந்திரசேகரன்:** மீஞ்சூர் பேரூராட்சியில் சுமார் 18,000 மின் இணைப்புகள் இருக்கின்றன. அங்கே நம்முடைய முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், அப்போதைய அமைச்சர் நேரு அவர்களும் நிறைய மின் உற்பத்தி நிலையங்களை அங்கே தொடங்கி அண்டை மாநிலங்களுக்கெல்லாம் மின்சார உற்பத்தி செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால், மீஞ்சூர் பகுதியில் மின் பற்றாக்குறை என்பதும், அறிவிக்கப்படாத மின் தடை என்பதும் இன்றளவும் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு காரணம் என்னவென்று ஆய்வு செய்தபோது, போதிய மின் ஊழியர்கள் அங்கு இல்லையென்று சொல்கிறார்கள். அதைவிட முக்கியமாக அங்கே நீண்ட நாட்களாக மக்களுடைய கோரிக்கை துணை மின் நிலையம். வளர்ந்து வருகின்ற நகரம், துணைமின் நிலையம் அமைக்கப்பட வில்லை. நிலம் கையகப்படுத்தப்பட்டு, அந்தக் கோப்பு வருவாய்த் துறையிலே இருக்கிறது. அதேபோல தற்போது இருக்கின்ற அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதுவும் பழுதடைந்து, இடிந்து விழக்கூடிய நிலையில் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், உதவி செயற்பொறியாளர் பணியிடம் கூட அங்கு காலியாக இருக்கிறது. இதன் காரணமாக அங்கு மின் பற்றாக்குறையும், மின் தடையும் ஏற்படுகிறது. அதை அமைச்சர் அவர்கள் மிக விரைந்து செயல்படுத்தி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் வி. செந்தில்பாலாஜி:** மின் வாரியத்திலுள்ள குறிப்பிட்ட சில காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு நிதித் துறையினுடைய அனுமதி கோரப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பணியிடங்களை நிரப்புவதற்கு நிதித் துறையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, தேவை ஏற்படக் கூடிய பணியிடங்களை நிரப்புவற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய பகுதிகளில் தேவை ஏற்படின் கண்டிப்பாக அங்கு ஆய்வு செய்யப்படும். தேவை ஏற்பட்டால் அவர் சொல்லக்கூடிய கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஜெ.எம்.எச். அசன் மௌலானா:** ‘உங்கள் தொகுதியில் முதல்வர்’ திட்டத்தின் மூலமாக வேளச்சேரிக்கு 47.17 கோடி ரூபாய் கொடுத்து, *overhead cables*ஐ *underground cables* ஆக மாற்றியிருக்கிறீர்கள். இருப்பினும் *underground cables* ஆனபிறகு, அந்த *overhead cables*ஐ கழட்டாமல் *underground cables*ஐ *activate* பண்ணாமல், *modern transformers* போடாமல் இருக்கிறார்கள். அதனால் இந்த மழைக்காலத்தில் பார்த்தீர்களென்றால், ஒரு கம்பி விழுந்து, ஓர் உயிரிழப்பு ஏற்பட்டு, முதலமைச்சர் அவர்கள் உடனடியாக ரூ.5 இலட்சம் நிவாரணம் வழங்கினார்.

இது பொத்தாம்பொதுவாக நடக்கிறது. தயவுகூர்ந்து ஒரு ஆய்வு எங்களோடு வந்து, இங்கு என்ன வேலை செய்திருக்கிறீர்கள், மேலே இருக்கிற *overhead cables*ஐ எப்போது கழட்டிவிட்டு, *underground cables*ஐ *activate* பண்ண போகிறீர்கள்; *already activate* ஆனது, எப்போது அதை அமுலுக்கு கொண்டுவரப்போகிறீர்கள் என்பதை கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் வி. செந்தில்பாலாஜி:** சென்னை மாநகராட்சிப் பகுதியில் குறிப்பாக உறுப்பினருடைய சட்டமன்ற தொகுதிதான் மின்வாரியத்தினுடைய பணிகள் அதிகமாக தேவைப்படுகிறது. தொடர்ச்சியாக அந்தப் பணிகள் முன்னுரிமை கொடுத்து எடுத்து செய்யப்பட்டு வருகிறது. மீதம் இருக்கக்கூடிய பணிகளும் கடந்த ஆய்வுக்கூட்டங்களில் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் முழுமையாக அந்தப் பணிகளை முடிக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே விரைந்து அந்தப் பணிகள் அனைத்தும் முழுமையாக முடிக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இ. கருணாநிதி:** பல்லாவரம் தொகுதி அனகாபுத்தூர், பம்மல், பொழிச்சலூர் பகுதிக்கு 33.11 KVல் ரூபாய் 48 கோடியில் புதிய துணை மின்நிலையம் அமைத்துக் கொடுத்த தமிழக முதல்வர் அவர்களுக்கும், துறையின் அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்து, குரோம்பேட்டை, அஸ்தினாபுரம் பகுதியில் புல எண் 54/9 களம் புறம்போக்கு 33/11 இடம் தேர்வு செய்யப்பட்டு, வழக்கு நிலுவையில் இருந்தது. அந்த வழக்கு மாவட்ட ஆட்சியர் மூலமாக தெரிவித்ததற்கிணங்க, அந்த நிலத்தை கையகப்படுத்தி, இப்போது மின்சார வாரியத்திற்கு ஒப்படைத்திருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணி எப்போது தொடங்கப்படும், நிதி ஒதுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் செந்தில்பாலாஜி:** அந்த நிலம் முழுவதும் மின்வாரியத்தினுடைய வகைப்பாட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யக் கூடிய பணிகள் முழுமையாக நிறைவு பெற்றபின்பு, *tender* கோரப்பட்டு பணிகள் தொடங்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் வி. செந்தில்பாலாஜி பதிலளித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கு.சீ.வெங்கடாசலம்
**டிசம்பர் 15 (2009)**



தம் இளம் வயதிலேயே கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

சேலம் ஒன்றியக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

1971 முதல் 1976 வரை சேலம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும், சேலம் சொர்ணபுரி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

1975ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் தொண்டர் படைத் தலைவராகப் பணியாற்றியவர்.

விவசாயப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**